**செய்தி வெளியீடு எண்: 681** **நாள்:18.09.2020**

**<u>செய்தி வெளியீடு</u>**

இன்று (18.09.2020) சென்னை, எழிலகத்தில் உள்ள மனித மேம்பாட்டு காணொளி அரங்கத்தில் மாநில கொள்கை வளர்ச்சிக் குழுவின் மாண்புமிகு துணைத் தலைவர் திரு. சி. பொன்னையன் அவர்கள் தலைமையில் ‘‘புதிய ஒருங்கிணைந்த ஜவுளி கொள்கை 2019’’ குறித்து காணொளி காட்சி மூலம் கருத்தாய்வு நடைபெற்றது.

மாநில கொள்கை வளர்ச்சிக் குழுவின் உறுப்பினர் செயலர் திரு. அனில் மேஷ்ராம், இ.ஆ.ப, அவர்கள் கருத்தாய்வில் கலந்து கொண்டோரை வரவேற்றார்.

புதிய ஒருங்கிணைந்த ஜவுளி கொள்கை 2019, துணி நூல் துறையில் புதிய முதலீடுகளை ஈர்த்தல், தொழில்நுட்ப மேம்பாடு, திறன் இடைவெளியைக் குறைத்தல், உட்கட்டமைப்பு உருவாக்குதல், சுற்றுச்சூழல் பாதுகாத்தல், ஒற்றை சாளர அனுமதி மற்றும் புதிய சலுகைகளை வழங்குதலை நோக்கமாகக் கொண்டது.

இக்கருத்தாய்வில் புதிய ஒருங்கிணைந்த ஜவுளிக் கொள்கை 2019 ன் செயல்பாடுகள் குறித்தும் புத்தாக்க முயற்சி மூலம் தமிழகம், நாட்டின் முதன்மை மாநிலமாக தொடர்ந்து திகழ்வதற்கு ஆலோசிக்கப்பட்டது.

திருமதி ஜெயஸ்ரீ ரகுநந்தன் இ.ஆ.ப, அரசு கூடுதல் தலைமை செயலாளர், திட்டம் மற்றும் வளர்ச்சி துறை, திரு ஷம்பு கல்லோலிகர் இ.ஆ.ப., அரசு முதன்மை செயலாளர், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை திரு கருணாகரன் இ.ஆ.ப., கைத்தறித் துறை, அரசு உயர் அலுவலர்கள் மற்றும் துறை சார் வல்லுநர்கள் இக்கருத்தாய்வில் கலந்து கொண்டு தமிழகத்தை துணிநூல் துறையில் முதன்மை மாநிலமாக மாற்றுவதற்கு தங்களது கருத்துக்களை பதிவு செய்தனர்.

உறுப்பினர்–செயலர்
மாநில கொள்கை வளர்ச்சிக் குழு

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**